உலகத்தமிழ்
உலகத் தமிழ்ச் சங்கம் மதுரை வழங்கும் மின்னிதழ்



# தனிமையில் ஒரு தேடல்

இலங்காதிலகம், டென்மார்க்

(பனிப்பகை-சூரியன். வனிகை-தோப்பு, பூந்தோட்டம்.

முனிவு – முயற்சி. அனிதம்-அளவற்றது. நுனித்து- கூர்ந்து)

தனிமை உணர்வு தவிர்க்க முடியாததே
இனிமை ஆக்குதலும் இலகு அற்றதே
தனிமையின் மிகப் பெரும் தேடலே
இனிமை உணர்பதிவுகளின் கவிதை ஆடலே.

பனிக்கட்டித் தனிமையின் பனிப்பகை, முயற்சியே.
வனிகையாக்கும் தனிமை வறட்சியை, ஆக்கவினையே.
முனிவாய் ஓவியம் முனைந்து தீட்டுதல்
அனிதமான ஊக்கம் ஆவலாய் வினையூக்கும்.

வாசிக்கும் இன்பம், கணினியில் தேடல்
நேசிக்கும் தமிழோடு உறவு கூடலால்
பூசிக்கும் நிலை பூரண இன்பம்.
யாசிக்கத் தேவையற்ற யாககுண்டம், தனிமையழிக்கும்.

தனிமையும் ஒரு வகையில் இனிமையே
இனிய இசைகேட்டு, இலக்குடை உலாவோடு
பனிக்குளிர் நீராடி பரவசமாய் அடக்குமுறையின்றி
நுனித்துப் பார் நிழலும் தனிமையே

நட்சத்திரக் கூட்டமிருந்தும் நிலவு தனிமையே
அட்சய பாத்திரமாம் ஆதவனும் தனிமையே
இட்டமுடை தேடலில் இசைவான ஆக்கத்தால்
சுட்டுவிடு தனிமையை சுகமாக ஆனந்தி.

((((((()))))))

utsmdu2@gmail.com